# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.80/2021

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு பிப்ரவரி மாதம் 02 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஜெயந்தி | மதம் | : இந்து |
| க/பெ | : குப்பாராவ் | ஜாதி | : -- |
| வயது | : 67 | கிராமம் | : அரக்கோணம் |
| தொழில் | : இல்லத்தரசி | வட்டம் | : அரக்கோணம் |

**02.02.2026**

**பி.வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

8. என் அப்பா எத்தனை புல எண்களுக்கு கிரையம் வாங்கியுள்ளார் என்றால் புல எண்.39/8, 54/1, 55/1, 42/10ல் 83 செண்ட் ஆகும். மொத்தம் எத்தனை சொத்துக்களை என் அப்பா கிரையம் வாங்கினார் என்றால் நான்கு சொத்துக்கள் ஆகும். எந்த வருடம் கிரையம் வாங்கினார் என்றால் 1973 ஆகும். 04.07.1973ஆம் தேதியிட்ட ஆவணமா என்றால் வருடம் தெரியும் தேதி தெரியாது. அசல் கிரைய ஆவணம் எங்கள் கைவசம் உள்ளதா என்றால் ஆமாம். அசல் கிரைய ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அசல் கிரைய ஆவணம் வீட்டில் உள்ளதா என்றால் இல்லை. நாங்கள் தாக்கல் செய்த வேறு வழக்கில் அசல் ஆவணத்தை தாக்கல் செய்திருந்தோம். அந்த வழக்கு தள்ளுபடி ஆகிவிட்டது. 1973ல் என் தம்பிக்கு என்ன வயது என்றால் 8 வயதாகும்.

9. வழக்கு சொத்திற்கான சிட்டா, பட்டா, வரி ரசீது தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கறிஞரிடம் உள்ளது. தாவா சொத்தின் புல எண்.42/10ல் 83 செண்ட் என்றால் ஆமாம். என் தம்பி இளவராக இருக்கும்போது 06.12.1973ல் வாதி அங்கம்மாளுக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் என் தம்பி அப்போது சிறு பையன் அவர் எப்படி கிரையம் கொடுக்க முடியும். என் அப்பா கிரையம் கொடுத்திருந்தால் எங்களிடம் சொல்லியிருப்பார். என் தம்பியை இளவராக காட்டிதான்

என் அப்பா கிரையம் கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. என் அப்பா என்னிடம் சொல்லவில்லை. தாவா சொத்தை மட்டும் என் தம்பியை இளவராக காண்பித்து கிரையம் கொடுத்ததால் அசல் கிரைய ஆவணத்தை என் அப்பாவே வைத்துள்ளார் என்றால் இந்த நீதிமன்றத்தில்தான் எங்களுக்கு தீர்ப்பு கொடுத்துள்ளார்கள். அப்படி கிரையம் கொடுத்திருந்தால் அந்த தீர்ப்பில் சொல்லியிருப்பார்கள்.

10. கிரையம் வாங்கிய தேதி முதல் வாதி பெயருக்கு பட்டா, சிட்டா, அடங்கல் உள்ளது என்றாலும் என் அப்பா கிரையம் கொடுக்கவில்லை என நாங்கள் பொய்யாக சொல்கிறோம் என்றாலும் சரியல்ல. நாங்கள் தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.83/2009ஐ யார் மீது தாக்கல் செய்தோம் என்றால் ஆனந்தன், சங்கமுத்து மீது தாக்கல் செய்தோம். என்ன பரிகாரம் கேட்டு அந்த வழக்கை தாக்கல் செய்தோம் என்றால் நாங்கள் சென்று பார்த்தபோது மனை பிரிவுகளாக பிரித்திருந்தார்கள். எனவேதான் நாங்கள் வழக்கு தாக்கல் செய்தோம். யார் யார் வழக்கு தாக்கல் செய்தோம் என்றால் நான், ஜெயஸ்ரீ, திலகா, ஷோபா ஆகியோர் மட்டும் தாக்கல் செய்தோம். என் தம்பி அப்போது இறந்துவிட்டார். என் தம்பி எப்போது இறந்தார் என்றால் 2004ல் இறந்தார்.

11. வாதி அங்கம்மாள் அசல் வழக்கு எண்.83/2009ல் தரப்பினர் இல்லை என்றால் ஆமாம். என் அப்பா கிரையம் வாங்கிய நான்கு சொத்துக்களுக்கும் வழக்கு தாக்கல் செய்தோமா அல்லது தாவா சொத்திற்கு மட்டும் வழக்கு தாக்கல் செய்தோமா என்றால் நான்கு சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்தோம். அசல் வழக்கு எண்.83/2009 தீர்ப்பானதா அல்லது தள்ளுபடியானதா என்றால் தீர்ப்பானது. அசல் வழக்கு எண்.83/2009ன் தீர்ப்பை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அதை என் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். அசல் வழக்கு எண்.83/2009ல் அங்கம்மாள் தரப்பினர் இல்லை என்பதால் அந்த தீர்ப்பு வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.83/2009ன் தீர்ப்பாணையை வைத்து பாகம் பிரித்து கொண்டோமா என்றால் ஆமாம். அந்த வழக்கின் தீர்ப்பை வைத்து நான்கு சொத்துக்களுக்கும் பாகம் பிரித்து கொண்டோமா என்றால் இல்லை. வழக்கு சொத்திற்கு மட்டும்தான் பாகம் பிரித்து கொண்டோம்.

12. 10.06.2021ல் வழக்கு சொத்திற்கு நாங்கள் சென்றோமா என்றால் ஆமாம்.

வாதி அங்கம்மாள் இது தெரிந்து திருவள்ளூர் நிலஅபகரிப்பு தடுப்பு பிரிவில் புகார் கொடுத்தார் என்றால் ஆமாம். அதன் பேரில் திருவள்ளூர் நிலஅபகரிப்பு தடுப்பு பிரிவில் விசாரணை நடந்ததா என்றால் ஆமாம். அசல் வழக்கு எண்.83/2009 தீர்ப்பை நாங்கள் திருவள்ளூர் நிலஅபகரிப்பு தடுப்பு பிரிவில் தாக்கல் செய்தோம் என்றால் ஆமாம். தாவா சொத்தை என் அப்பா விற்ற விவரம் தெரிந்தும் நாங்கள் வழக்கு தாக்கல் செய்து அந்த தீர்ப்பின் அடிப்படையில் பட்டா மாற்ற முயற்சி செய்தோம் என்றால் நாங்கள் பட்டா மாற்ற முயற்சி செய்தோம். நாங்கள் பட்டா மாற்ற முயற்சி செய்ததை தெரிந்து வாதி ஆட்சேபணை தெரிவித்தார் என்றால் ஆமாம்.

13. என் அப்பா வாதிக்கு ஏற்கனவே விற்ற சொத்தை அபகரிக்க வேண்டி பொய்யாக வழக்கு தாக்கல் செய்து தீர்ப்பு பெற்று அதன் பேரில் பட்டா மாற்ற முயற்சி செய்தோம் என்றால் இல்லை. நாங்கள் உண்மையை மறைக்க வேண்டிதான் எந்த ஆவணங்களையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் என் வழக்கறிஞர் கேட்டால் தாக்கல் செய்வோம் என்று சொல்லிவிட்டார். வாதிக்கு பிராதுப்படி தீர்ப்பு செய்யத்தக்கது என்றால் சரியல்ல. என் அப்பா சொத்தை வாதிக்கு விற்ற பின்பு எங்களுக்கு அந்த சொத்தில் உரிமையில்லை என்றாலும் வாதி கோரியப்படி தீர்ப்பு செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)